# ஓ,
# வெற்றி
# நிச்சயமே

இலங்கைத்
தமிழர்
ஆசிரியர்
சங்கம்
நடத்திய
போட்டிக்
கவிதைகள்



பதிப்பாசிரியர்:
ஆ. க. மாணிக்கம்

வெளியீடு:
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

MISS. K. SUNDARAMPILLAI

ஓ. வெற்றி நிச்சயமே
(கவிதைத் தொகுப்பு)

வெளியீடு : இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.
29, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்

முதற்பதிவு : 1982-03-05

விலை : ரூபா 4-00

எல்லா உரிமைகளும் இ. த. ஆசிரியர் சங்கத்திற்கே

# O VETTI NICHCHAYAME

(Anthology in Tamil)

*Publishers* : Ceylon Tamil Teachers' Union
29, Jumma mosque Lane,
Jaffna.

*Printers* : Chettiar Press, Jaffna.

*First Edition*: 1982-03-05

*Price* : Rs. 4-00

*Copyrights reserved for Ceylon Tamil Teachers' Union*

# பதிப்புரை

ஈழத்து இலக்கியப் பரம்பரையின் முன்னேடிகளான ஆசிரியர்களிடையே அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கல்வி கலாசாரப் பிரிவு ஒரு கவிதைப் போட்டியை நடத்தியது. அதில் ஏழு கவிதைகளைத் தொகுத்துத் தமிழ் உலகிற்களிக்கின்றோம். ஏழு கவிஞர்களை இதன் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வைப்பதிற் பெருமையடைகிறோம்.

போட்டிக்கு வந்த கவிதைகளை மதிப்பிட்டுத் தந்த கலாநிதி அ. சண்முகதாஸ், திருவாளர்கள் க. சொக்கலிங்கம் (சொக்கன்), க. த. ஞானப்பிரகாசம் ஆகியோருக்கும்,

நூலை அழகாக அச்சேற்றித்தந்த யாழ்ப்பாணம் செட்டியார் அச்சகத்திற்கும் எம்மனமார்ந்த நன்றி.

தமிழுலகு எம்முயற்சிக்கு ஆதரவு தரும் என நம்புகிறோம்.

புனித இல்லம்
கரணவாய் வடக்கு
1982-03-05

ஆ. க. மாணிக்கம்
பதிப்பாசிரியர்
கல்வி கலாசாரச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

# முன்னுரை

பாரதியின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே தமிழர் ஆசிரியர் சங்கம் கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடுவது சாலப்பொருத்தமானதே.

தொகுதியின் முதலிரண்டு கவிதைகளும் புதுக் கவிதைப் பாணியிலும் ஏனைய ஐந்தும் மரபுக் கவிதைகளாகவும் அமைந்துள்ளன. கவிதைகளிலுள்ள வேகமும் உணர்ச்சியும் வியக்கத்தக்கனவாக இருக்கின்றன. சிறுமைகண்டு பொங்கும் சீற்றத்தை அக்கவிதைகளிலே தரிசிக்கக் கூடியதாக உள்ளது.

ஆசிரியர்கள் தங்களுக்காக மட்டுமல்ல, தம்மைச் சுற்றியிருப்பவர்களுக்காவும் இரத்தக் கண்ணீர்வடிப்பதை இக்கவிதைகளிற் காண்கிறோம். இன்றைய கல்வித்திட்டத்தையும் அதிகாரிகளின் போக்கையும் அவர்கள் சாடுவது சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் செய்த பல நற்பணிகளுள், இக்கவிதைத் தொகுதி வெளியீடு கால ஓட்டத்தில் நிலைத்து நிற்கும் ஒன்று என்ற பெருமையைப் பெற்றே தீரும். சங்கத்தின் இலக்கியப்பணி வருங்காலத்திலும் தொடர வேண்டும் என்பது என் அவா.

வணக்கம்

'திரிகூடம்'
மூதூர்
1982-03-05

வ. அ. இராசரத்தினம்
உதவித்தலைவர்
இ. த. ஆ. சங்கம்

# பொருளடக்கம்


பக்கம்

1. ஓர் ஆசிரியரின் கண்ணீர் — 1
திருமதி இரஞ்சினி தருமலிங்கம்

2. விழிப்புணர்ச்சி விரிய வேண்டும் — 4
திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா

3. ஓ, வெற்றி நிச்சயமே — 6
திரு. ரீ. சுந்தரலிங்கம்

4. கல்வியோ கல்வி — 10
திரு. மு. மாணிக்கம்

5. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் — 14
செல்வி மு. சிதம்பரப்பிள்ளை

6. கல்விப் பணிப்பாளருக்கு — 16
திரு. க. அமரசிங்கம்

7. ஆற்றுது உழைத்திட்ட பாட்டாளி — 19
திரு. மு. பாலசுப்பிரமணியம்

# ஓர் ஆசிரியரின் கண்ணீர்

கோழி கூவியதும்
பிள்ளைகள் குவித்துத் தந்த
நேற்றைய எழுத்துக்களைத்
திருத்தி நிறைவு செய்ததும்
வீட்டு வேலைகள் முடிந்ததும்
சீட்டுக் காசினுல்
சில நாட்களுக்கு முன் வாங்கிய
சீனத்துச் சைக்கிளில்
பள்ளம் திட்டிகள்
முள்ளுகள் தவிர்த்து
அந்தப் பாடசாலைக்கு
அதிகாலையில் சென்றிடுவேன்.

எட்டு வருடமாய்
கஷ்டப் பிரதேசத்தில்
நாலு வகுப்புக்களுக்கும்
நானே தலைவனுய்
தமிழ் சொல்லிக் கொடுக்கின்றேன்.
மீனெனத் துள்ளியோடும்
தேன் தமிழின்
திறமை மிகு மாணவர்கள்
நானடிக்கும் மணியினுல்
பாடப்புத்தகங்களை
திறந்து தமிழைச் சுவைப்பர்.
நாலு வகுப்பிற்கும்
நானே பிரம்மா

நடுத் தெருவில்
நம்ம குழந்தைகளை

அலையை விடுவதற்கோ
வயலில் உழுவதற்கோ
வடை வாங்கக்
கடைக்கு அனுப்புவதற்கோ
என்படிப்பு

இற்றைவரை இடம்தராததால்
நாலு வருடமும்
நாற்பத்தொரு நாள் விடுமுறையில்
இன்னும் ஒரு நாளையும்
இன்றுவரை எழுதவில்லை.

என்தன் பாடசாலையின்
இதய நிலாக் குழந்தைகள்
இந்து சமயப் பரீட்சையுடன்
எல்லாப் பாடங்களிலும்
நல்லாய் சித்திபெறுவது
நமது பெரிய அதிகாரிகள்
ஒவ்வொரு மாதமும் வந்து
எழுதும் எழுத்துக்களில்
மூழ்கிய நிலவாய்
முழுமை பெற்றுள்ளது.

உதவிக்கு ஒரு ஆசிரியர்
உடனே தருவதாகச் சொல்லி
பாடசாலைக்கு வெளியே சென்றதும்
பெரிய அதிகாரிகள்
பல வேலைகளால் மறந்துபோய் விடுவர்.
தொண்டர் ஆசிரியர் நியமிக்கவும்
வெண்கட்டி, ஊசி, கடுதாசி
திருத்தவேலை, சம்பள உயர்வு
எடுப்பதற்கான கடிதங்களும்

அலுவலகக் கூடையுள்ளே
அமைதியாகத் துயில் கொள்ளும்.

எந்தன் தமிழை
எல்லாக் குழந்தைகளும்
தன்தன் நிலைமைகளில்
தவறாது படிப்பதற்காக
சில நாளாய்
எச்சிலுடன் வெளிவரும்
இரத்தச் சித்திரத்தை
தூரத்து ஆஸ்பத்திரிக்கு
தூக்கிச் செல்ல நேரமில்லை

நான் வெளியே சென்றால்
என் ஆலயம் பூட்டப்படும்
பக்தர்கள் தரிசனம் நிகழாது
பூக்களும் அங்கே மணக்காது
நட்ட மரங்கள்
நாளை பூக்கட்டும்
வெட்ட வெளியில்
விருட்சமாய் வளரட்டும்
எனது கண்ணீர்
என்றோ ஒரு நாள்
இவர்கள் உடலை
இனிதாய் நனைக்கட்டும்.

திருமதி இறஞ்சினி தருமலிங்கம்

* * *

# விழிப்புணர்ச்சி விரிய வேண்டும்!

வேகம் வேகம்
யந்திர வேகம்
வேகம் இன்னும் கூடிப்போனல்
வெடிப்பு நிகழும் ஒருநாள் போதில்!
ஓட்டம் ஓட்டம்
கனகதி ஓட்டம்
கல்லூரி வீடு டியூட்டரி என்று
கலைந்து போகும் படிப்பு எல்லாம்
ஐந்து வருடம்
ஐயாயிரம் செலவு.
வந்து சேர்ந்த மறுமொழி யெல்லாம்
''வாசிற்றி'' கிடைக்கவில்லை!
வேலை இல்லை
சோலி வேணும்
ஆலடிச் சந்தியைச் சுற்றிச் சுற்றி
ஐந்து முறைகள் உலாவரும் கோலம்
காலை மாலை
கடற்கரை சினிமா
சீப்புக் காணுத் தலையின் கோலம்
சைக்கிள் மேலே ஊர் கோலம்
சைக்கிளின் அணிவகுப்பு
தெருவெல்லாம் கதவடைப்பு
மச்சான் தோளில் கையைப் போட்டு
மலர் விழிக்கு ஒரு ''ஹின்ரடிப்பு''!

பாட்டு ஆட்டம்
பலவித நாட்டம்
எலிபண்ட் பொட்டம் வீதி கூட்டும்
'பொம் பொம்' பாட்டு தெருவைக் கூட்டும்
வீட்டிலே யாரும்
கேட்டு விட்டாலோ
பொலிடோல் போத்தல் தலையைக் காட்டும்
பயமுறுத்தல் 'அப்பு'வைப் பணிய வைக்கும்!
விழிக்கின்ற சமுதாய
விடிவிதுவா?
நாளைய உலகின் நாயகரெல்லாம்
நாசமாய்ப் போருர் எரியுது வயிறு!
தேடு தேடு
காரணி எங்கே?
தெருவில் திரியும் 'பெடியளு'க் கெல்லாம்
தெளிவாய்த் தெரியும் பதில்களுனக்கு!
வருடம் வருடம்
'சிலபஸ்' மாறுது!
பெடியளுக்கெல்லாம் தலையைச் சுத்துது!
வகுப்பில்
வழிகோலிகளோ நித்திரை தூங்கிருர்
அதிபர் வகுப்பிற்குப்
போகச் சொன்னுல்,
'ஸ்ராஃப்றூம்' கதிரைக்குப் பாரமாகி
அவருக் கொரு 'ஐஸ்' அடிப்பு
அமைதியான புன் சிரிப்பு!

குளறிக் குளறி
டியூட்டரி பலதில்
அலறிப் போன தொண்டைக் கோய்வு
அமைதியாகப் பள்ளியில் கிடைக்கும்!
தப்பித் தவறி
வகுப்பிற்கு வந்துவிடும்
கணித ஆசிரியரும்
'கணக்கு விளங்கும் டியூசனில்' என்ருல்
காணுகின்ற முடிவிது தானே!
பொறுப்பு எங்கே
இதற்கு எல்லாம்
விழிப்புணர்ச்சி ஆசிரிய உலகில்
விரிய வேண்டும் விரைவாய் அதுவும்!

திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா

# ஓ, வெற்றி நிச்சயமே

ஏடீ இளவரசி என்முகத்தைப் பாராமல்
வாடிக்கைப் புன்முறுவல் வந்தெனக்குக் காட்டாமல்
கோடியிலே போய்நின்றேன் குலுங்கி அழுகின்ருய்?
வாடாத உன்வதனம் வாடியதன் காரணமென்?

சீரைத் தருகின்ற சித்திரமே நானுனக்கு
வாரத்துக் கொருகடிதம் வரையாத காரணமா?
வீரத்தை முறமெடுத்து விளக்கிவைத்த தமிழச்சி
ஈரத்தை உன்விழியில் ஏன்தேக்கி விட்டாய்நீ?
காரணத்தைச் சொல்லாமல் கண்கலங்கி
நிற்பதெலாம்
வீர மறக்குலத்து வஞ்சியருக் கழகல்ல!

முந்தி எனைப்பார்க்க முகவானில் வந்தநிலா
இன்று எனைப்பார்த்து எங்கே மறைந்ததடி?

பாட்டென்றும் பரதமென்றும் பட்டிமன்
றங்களென்றும்
கூட்டமென்றும் கொள்கையென்றும் கூவித்
திரிகின்றேன்;
வீட்டில் இருப்பதில்லை வில்லங்கப் பட்டொருநாள்
மாட்டுப் படுவேனே என்றெண்ணிக் கலங்குவதா?

முன்னரெலாம் இளமைதரும் முறுக்கிற்
றிளைத்திருந்து
உன்னழகை வருணித்து ஓர் கவிதை பாடுவதும்
வண்ண மடலாக வரைவதுவும் பெறுவதுவும் உன்
சின்ன இதழோரம் சிதறிப் பிளக்கின்ற
புன்னகைக்காய்க் காலமெலாம் போக்கடித்து
வாழ்வதும்தான்
என்னினிய வாழ்வென்று எண்ணி யிருந்ததுண்டு

பாருக்குள் நான்பெற்ற பதுமையடி எனை நல்லூர்த்
தேருக்கு வரச்சொன்னய்! தேவன்நான் வரவில்லை!
ஊருக்குள் நடந்ததொரு உரையரங்க
மேடையிற்சொற்
போருக்குப் போயிருந்தேன் புறப்படவோ
நேரமில்லை

சீருக்குள் நின்று சிரிக்கின்ற கவியெழுதி
ஊருக்கு உழைக்கின்றீர் உங்கள் விசர்க்குணத்தை
யாருக்கு அத்தான் யாரெனடுத்துச் சொல்லியழ?

என்ற கருத்தோடு எனைப்பார்த்துச் சீறுகின்ற
கன்றே இளமானே காதலியே கூறுவன்கேள்!
காருக்குள் மின்விசிறிக் காற்றைச் சுகிப்பவர்க்கே
தேருக்குப் போவதற்கும் திருவிழாப் பார்ப்பதற்கும்
நேரம் இருக்குமடி நேரிழையே மெலஎட்டிப்
பாருக்குட் பார்நூறு பள்ளங்கள் மேடுகளை!

எத்தனையோ எத்தனையோ எத்தனையோ அவலங்கள்
மெத்த இருக்குதுஇம் மேதினியில் தீயெடுத்து
வைத்து எரித்தாலும் வயிற்றெரிச்சல் தீராது!

மாடங்கள் கோபுரங்கள் மாளிகைகள்
இவையெல்லாம்
மாடாய் உடல்வளைந்து மனித இயந்திரங்கள்
ஓடாகத் தேய்ந்து உருவாக்கி வைத்துவிட்டு
ஆடாத கல்லாக அசைவற்று நிற்பவர்கள்

பத்து ரூபாவைப் பார்ப்பதற்குப் பனிவெயிலிற்
செத்து மடிபவர்கள் செயமென்ப தறியார்கள்

கண்டியிலே கம்பளையில் காணுநுவ ரெலியாவில்
கொண்டபனி வரையெல்லாம் கொஞ்சுமெழிற்
கோலமதைத்

தந்துவிட்ட மாரியப்பன் தளிர்எடுத்த கருப்பாயி
முந்து மிலங்கையினை முன்னேற்றி வைத்தவர்கள்

கட்டாந் தரையெல்லாம் கனிவிளையும் நிலமாக்கி
கொட்டும் பனிவரையிற் கோலம் வரைந்தவர்கள்
எட்டடியிற் கொட்டிலிலே எல்லாம் புரிபவர்கள்
குட்டுப் படுவதற்கே குனிந்து வளைந்தவர்கள்

இன்னும் குனிந்தபடி இருப்பதற்குக் காரணமென்?
தன்நிலையைத் தானுணராத் தன்மையது
காரணமோ?
கும்மிருட்டில் வாழ்ந்து குளிர்காய்ந்த காரணமோ?
தன்னரிய கையெழுத்தைத் தானெழுத்தில்
வைப்பதற்கு
இன்னும் பெருவிரலை எதிர்பார்க்கும் காரணமோ?

மற்றவர்கள் தமைஏய்க்க மரமாக வாழ்வதெலாம்
கற்றறிவு இல்லாத காரணமென் றறியாயா?

கல்வியிலா ரெல்லாம் கண்ணில்லா ரென்ற
நல்லதொரு தத்துவத்தின் நலமுணரப்
பண்ணுவம்யாம்

இல்லாரை உள்ளார்கள் இனிச்சுரண்டும்
காலம்போய்
எல்லாரும் வளமெல்லாம் இனிதுபெற யாமுழைப்
போம்

செல்வத்தை யாம்மட்டும் சேகரித்தல் பெரிதல்ல
நல்வித்தை நலமெல்லாம் நாம்மட்டும் கற்பதல்ல
உள்ளத்தைக் கல்லாக்கி உறுதுயரோ டெந்நாளும்
மல்யுத்தம் போடும் மனிதர்விழிக் கொளியூட்டி
கல்விப் பயிர்விளையக் கரங்கோத்து யாமுழைப்
போம்

சொல்விற் பனமெல்லாம் சொகுசாகக் கவிதையிலே
அள்ளித் தெளிப்பதிலே ஆவதுவோ ஒன்றில்லை
வள்ளிக்கும் மலைக்காட்டை வாழவைக்கும்
காளியம்மா
பிள்ளைக்கும் கொஞ்சம் பொருள்புரிய வழிவேண்டும்

தேசறுந்த சமுதாயத் தொய்வுகளை நீக்கிஅதன்
மாசறுந்து போவதற்கும் மலர்ச்சியினைக்
காண்பதற்கும்
ஆசையினால் இன்னல்களில்அரைபட்டுஇலக்கியத்துப்
பாசறையில் விடிவுப்போர்ப் பறைமுழக்கம்
செய்கின்றேன்

ஏக்கம் நிறைந்தவிழி; இருளிருந்து ஒளியைஎதிர்
பார்க்கும் உலகமிது படும்அவலம் போக்கவென
ஊக்கம் பிறந்ததடி, உள்ளம் விரிந்ததடி
ஆக்கம் புரியவென அழகு தமிழெடுத்தேன்;
நீக்கமறுங் காதல் நினைவிற் குடிகொண்டு
ஆக்கமுறத் தொண்டாற்ற அறிவணங்கே நீயென்னை
ஊக்கிவிடு இளவரசி! ஓ, வெற்றி நிச்சயமே

**திரு. ரீ. சுந்தரலிங்கம்**

* * * * *

## கல்வியோ கல்வி

சங்கம் எடுத்துத் தமிழ் வளர்த்த சாயலிலே
எங்கள் குருச்சங்கம் எடுக்கின்றதொரு போட்டி

நன்றி.

போட்டிக்கொரு கவிதை எதுபற்றி எழுதுவது?
நாட்டிலுள்ள கல்வி நிலை கலாசாரக் குழப்பநிலை
ஈட்டிபோற் றைக்கின்ற ஈடுசெய்யா வாழ்க்கைநிலை
எதனை எழுதுவது? என்றென்று எண்ணுகையில்
இதனை எழுது இதுவும் தெரியாதா?
உன் தொழிலை நீ எழுது; நீயும்ஓர் ஆசிரியன்
என்றுசொல்லி என்இதயம் உந்திநின்ற
போதினிலே
எழுதுகின்றேன் எழுதுகின்றேன் ஏற்பீரோ
விடுவீரோ
திண்ணைப் பள்ளியிலே திருவாளர் குருவிருக்க
அங்கவரைச் சுற்றி அமர்ந்திருப்பார் பலசீடர்
ஒன்றுசொல்ல முன்பே ஓராயிரம் வணக்கம்
நன்றுசொல்லி நன்றி சொல்லி ஏற்றிடுவார்
அவர்குறிப்பை
குருசென்ற பாதையிலே குறிதவறுச் சுவடுபற்றி
அருமருந் தன்னவித்தை அயராமற் கற்றுவந்தார்

அக்காலத்தில்
கல்விமா அதிபதிகள் கனவிலும் இருந்ததில்லை
வட்டாரக் கல்வி அதிகாரி வருவதில்லை
குருவுக் கிடைக்காலப் பயிற்சி தொடர்வதில்லை
புதியமுறைக் கல்விகள் புகுத்தப் படுவதில்லை
ஆசிரியர் மாற்றம் அடிக்கடி நிகழ்வதில்லை

சங்கங்கள் தோன்றிச் சாதனைகள் புரிவதில்லை
நேரம் அளந்து கடிகாரம் பார்ப்பதில்லை
அதிபருக்கு மாற்றமென்றால் பகிஷ்கரிப்பு
நடப்பதில்லை
கடன்சபைகள் கூட்டிக் கடன் கொடுக்கத்
தேவையில்லை
தளபாடப் பணம்கட்டிப் பள்ளிக்கு வைப்பதில்லை
சம்பள உயர்ச்சியில்லை சந்தோசம் உயர்வதில்லை
சீராகச் சிறப்பாகச் சிந்தனைக்கு விருந்தாக
நேரான கல்விநிதம் பெற்று வந்தாலும்
காலத்தில் மாற்றம் கடுகிநடை போட்டதனால்
கோலமிக்க இக்கல்வி ஏட்டுச்சுரைக் காய்தான்
இதிலொன்றும் தப்பில்லை
ஏட்டி லடங்கிவிட்ட எழுத்தாணி யிட்டகல்வி
பாட்டுப் படித்துப் பயன்சொல்லத் தான்உதவும்
என்றதனால் ஏதோ ஒருமாற்றம் வேண்டுமென
இன்றுள்ள கல்விநிலை ஒருமலராய் அரும்பியது
விஞ்ஞானக்கல்வி விரைவாக முன்னேற
கணிதமதைச் சார்ந்து கடுகி நடையிட்டதனால்
அரசியலும் புவியியலும் அத்தோடு பொருளியலும்
ஆக்கம் அளவையியல் அருங்கலைகள் பலவாக
விரிவான நோக்கம் விரைந்து வளர்வதற்கு
அரசாங்கம் செய்துவரும் அளப்பரிய சேவைகளைப்
பிரசாரம் செய்துபறை சாற்றிடத் தேவையில்லை
அநுபவத்திற் கண்டுள்ளோம் ஆனாலும் கல்விநிலை
அடிமட்டம் கண்டு அசையாமல் நிற்கிறது
இன்னும் இடமிருந்தால் இறங்கவும் விழைகிறது
காரணங்கள் என்ன?

கல்விப்பயிர் வளர்க்கக் காட்டாருய்ப் பெருகிவரும்
அரசுப் பணமெல்லாம் அண்ணைகுடி தம்பிகுடி
சம்பளப் பத்திரத்திற் சரிவரக் கணக்கிருக்கா
என்று பார்க்கும் ஆசிரியர் அங்கிருக்கும் மாணவரை
உங்களுக்குக் கல்விசொன்ன ஊதியந்தா
னிது வென்று
சொந்தமுள்ள பிள்ளைகளாய் அவர்வாழ்வை
வளர்ப்பதில்லை
கால அளவைக்குள் கல்வி சொல்லும் நேரத்தில்
போட்டிகள் வந்து பொழுதைக் கழித்துவிடும்
விளையாட்டுப் போட்டியென்றால் விடுமுறைதான்
மாணவர்க்கு
நாடகப் போட்டியென்றால் நாளெடுக்கும்
வகுப்பெடுக்கும்
இப்படிப் பலபோட்டி இருக்கத்தான் வேண்டு
மென்றால்
அப்படியே காலத்தை அழித்தொழித்தல் அழகல்ல
புகையோடு ஆசிரியர் புகுந்திருப்பார் வகுப்பினிலே
நெடியடிக்கும் நெடியடிக்கும் நெடியடிக்கும்
நெடியடிக்கும்
பள்ளிப் படிப்பதனுல் பயன் கூடாதென்று கண்டு
பிரத்தியேக கூடங்கள் பிடுங்குகின் றனகாசு
புதியமுறைக் கல்வி புகுத்தப்படும் போது
பிரத்தியேக கூடத்திற் கற்பிக்கும் 'பேபி' அக்கா
பழையமுறை சிறந்ததென்று பிதற்றுகிருர்
ஒருபக்கம்
வீட்டிலும் பள்ளியிலும் மாணவர்கள் தங்குவது
கூட்டினிற் குருவி குறிதப்பி இருப்பதுபோல்
காலைமாலை எவ்வேளை சாலையிலே பார்த்தாலும்

மாணவர்கள் படையெடுத்துப் படிக்கின்றார்
தனிமுறையில்
படித்தென்ன விட்டென்ன பாட்டியா வேலைதர
அடிக்குமே யோகம் அயல்நாடுகள் சென்றால்
என்றெண்ணும் கூட்டம் மிகஏறி வருவதனால்
சமுதாயப் போக்கில் சலசலப்பு மிஞ்சியதால்
வெலவெலத்து மாணவர்கள் மாய்கின்றார்
அலைகின்றார்
ஆசிரியப்பணி செய்ய அனைவருமே முன்வந்தால்
பேசரியகல்வி பேசாமல் அகன்று விடும்
எய்தவன் எங்கோ இருப்பான் அதற்காக
செய்தவம் அற்ற சிறுவர்கள் பலியாவார்
இத்தனையும் சொல்லிவிட்டேன் இதிலொன்றும்
பொய்யில்லை
தொப்பி அளவென்றால் தூக்கிடுவீர் அணிந்திடுவீர்

வணக்கம்.

திரு. மு. மாணிக்கம்

★ ★ ★ ★

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

(கும்மி)

மண்ணினில் நல்ல வண்ணமாய் வாழ்ந்திட
மாண்புடன் கல்வியைக் கற்றிடுவோம்
பண்ணிய புண்ணியம் பாரி லிதுவெனப்
பாடுகள் பட்டே யுழைத்திடுவோம். 1

கற்றும் பயனில்லை யென்றே யழுதுநாம்
கண்ணீரதிக முகுத்து விட்டு
மற்றும் பொருள்விற்று மந்திரிமார் வாசல்
சுற்றித்திரிதல் வசை யலவோ. 2

மேழிச் செல்வம்என்றும் கோழை படாதென
மேன்மையுட னவ்வை கூறிவைத்த
ஆழக் கருத்துள பொன்மொழி கற்றுமே
ஆர்வமுடன் தொழில் செய்திடுவோம். 3

சொற்பொருள் நன்று யறிந்திடுவோம் நாங்கள்
சோர்வின்றி வாழப் பழகிடுவோம்
பற்பல வூர்களுஞ் சென்றிடுவோம் நன்றாய்ப்
பார்த்துப் பொருள்செய்யக் கற்றிடுவோம். 4

மேட்டு நிலத்தில் தேயிலை றப்பரும்
வீட்டு நிலத்தினில் காய்கறியும்
ஏட்டுப் படிப்புடன் நின்றிடா தென்றுமே
கேட்டுப்பல தொழில் செய்துழைப்போம். 5

மாவலி கங்கையி னேர்கிளையை யிப்போ
வன்னி வழியே திருப்பிடுவார்
ஆவலுடன் நாமும் அந்நீரைக் கொண்டுமே
நாடுகளில் பயிர் செய்திடுவோம். 6

தோடை திராட்சை மாவொடு வாழையும்
தேடியே தோட்டத்தில் நட்டிடுவோம்
பீடைகள் வாராது கூடிய சீக்கிரம்
பேணிவளர்த்துப் பயன்பெறுவோம். 7

பன்னெடு பின்னல் தையல் வேலைசெய்யப்
பாவையர் என்றுமே முன்வருவோம்
இன்னலும் நீங்கியே ஏழையும் வாழ்ந்திட
இருக்குந் தொழில்பல நாமறிவோம். 8

காலை வனமெல்லாஞ் சோலை வனமாக்கிப்
பாடுபட்டுப் பயிர் செய்திடுவோம்
சாலைகள் தோறும் தொழில்கள் பெருக்கியே
வேலைத் திண்டாட்ட மொழித்திடுவோம். 9

பாரதி கம்பரும் நேரா யுணர்த்தினர்
பாரினிற் கைத்தொழில் தான் சிறப்பாம்
ஆர்வமுடன் நாமும் அவ்வுரை பற்றியே
ஊர்தேசம் போற்ற உழைத்திடுவோம். 10

செல்வி மு. சிதம்பரப்பிள்ளை

## கல்விப் பணிப்பாளருக்கு

கல்விக் கழனியின் காவல் தெய்வமே,

சொல்லால் செயலால் நல்வழி காட்டிக்
கடமையைச் செய்வதே கடவுளைத் தொழுவதாய்
திடமுறக் கூறித் தெளிவுற மொழிந்தோய்!

செருப்பாய்த் தேய்ந்து சேவை செய்தோன்
நெருப்பாய் எரியும் நெஞ்சனுய் மாறினேன்
எழுத்தறி வித்த இறைவருள் ஒருவன்
எழுதும் கடிதம் ஏற்றுநீர் படிப்பீர்.

நல்லன அல்லன நடுநின் ருய்ந்து
எல்லாம் வல்ல இறைவனின் பார்வையின்
முன்னே நிற்பதாய் முதலில் உணர்ந்து,
என்நிலை உமக்கே இருப்பதாய் எண்ணி,
காய்தல் உவத்தல் கருத்தினில் தவிர்த்து,
வாய்மைத் தளத்தில் வலுவுடன் நின்று,
உயிர்வாழ் உலகம் உன்னைப் போற்ற,
மயிர்பிழந் தன்ன மறுவற நீதி,
வழங்குவீர் என்ற வன்மை எண்ணம்
உளமதில் உதிக்க, உமக்கிது வரைந்தேன்.

ஆறு ஆண்டினுள் அநீதி காட்டி,
தாறு மாருய்த் தவறிலா எனக்கே,
கெட்டித் தனமாய் எட்டிட மாற்றக்
கட்டளை இட்டீர் காரணம் இன்றி.
தட்டிக் கேட்பதைத் தவிர்த்தேன். பணிந்தேன்.
இட்ட கட்டளை ஏற்றேன் சென்றேன்.
எட்டாந் தடவை இடமது மாற்றி,
எட்டாத் தூரம் ஏகுவாய் என்று,

இட்டீர் கட்டளை. இதனை எதிர்த்துத்
தட்டிக் கேட்கிறேன் தருகிறேன் எதிர்ப்பு
ஐம்பது வயதை அடைந்தோன் தன்னை
தும்பு தேய்ந்த துடைப்பம் போன்று
அயரா துழைத்து அரைஉடல் பெற்றே,
இயலா துடலம் இளைத்தோன் தனக்கே,
மருந்தள வேனும் மானிட நேயம்
இருந்திடாச் செயலை இயற்றினீர். இதயம்
இரும்போ? அல்லது இளகாக் கல்லோ?
வருவாய் வேறு வழியில் பெற்றிடா,
ஒருவன் உழைப்பில் ஒன்பது உயிர்கள்,
ஒருநாள் ஒருதரம் உண்டு, வாழ்வைக்
கருக்கி உருக்கிக் கண்ணீர் பெருக்கி,
உருவது சிதைந்து உளமது நொந்து
சொத்தெலாம் விற்றுச் சோறு கறிக்காய்,
செத்துப் பிழைத்துச் சீவியம் போக்கும்,
எந்தன் குடும்ப ஏழ்மை நிலையிது,
சிந்தை இரங்காச் செயலிது தவிர்ப்பீர்
சந்தனக் கட்டைபோல் சமூக சேவையில்
என்றனைத் தேய்த்து ஏழ்மை அடைந்தவன்
ஊரும் உலகமும் உரைக்கும் உண்மை
நீரும் இதனை நேருக்கு நேராய்
ஊருள் அறிந்தால் உள்ளம் நொந்து
பெருந்துயர் பெற்றுப் பிழையினைத் தவிர்ப்பீர்.
எத்து வித்தையின் இலக்கணம் பயின்று,
புத்தி மயக்கும் பொய்யுரை புகன்று
பத்தைந்து வாங்கிப் பணப்பை நிரப்பும்
சுத்த சுயநலச் சூழ்ச்சித் திறனுள
அற்பத் தனமுடை அரசியற் கூத்தர்

சொற்படி ஆடும் சூத்திரப் பொம்மையாய்
நிற்பதை விட்டு நீதியைச் செய்வீர்.
அரசியல் வாதியின் அடிதனை வருடி,
தரகராய் நின்று, தன்னுடல் வளர்ப்போர்,
அடிக்கும் தாளம் அதற்கே ஏற்ப
அடிவைத் தாடும் அரசியல் வாதியும்;
அரசியல் வாதி ஆட்ட ஆடும்
உரமுடை நெஞ்சை உடையவர் உம்மால்
தரப்படும் கட்டளை தனக்குத் தகவே
அரவும் பிழைத்திடா தாடும் நானும்
அரசியல் தரகரின் அதிசய சக்தி
ஆட்ட ஆடும் அற்பப் பிறவியாம்.
வெட்கம் வேதனை வியப்புக் கலந்த
சம்பவம் தெரிந்து சந்தி சிரிக்குது.
எம்மனம் இதனுல் எரிந்து வெடிக்குதே.

திரு. க. அமரசிங்கம்

## ஆற்றுது உழைத்திழைத்த பாட்டாளி உதிரம் ஊற்றுக உடன்வந்து சேர்ந்ததிது கேளீர்

மலைவளமும் பலவளமும் தான்கொண்ட மலைநாடு
மணியிலங்கை தனையுலகிற் கறிவித்த திருநாடு
தொலைவிலுள்ள அன்னியர்கள் தமையழைத்த
பெருநாடு
தொலையாத செல்வத்தைச் சேர்க்குமுயர் மலைநாடு

பாடுமுயர் பாவலரின் பாவில்நிறை வளநாடு
பசுமரங்கள் படிமுகில்கள் முடிகொண்ட உயர்நாடு
தேடுகின்ற செல்வத்தைச் சேர்க்குமுயர் திருநாடு
தேயிலைறபர்த் தோட்டங்கள் தான்கொண்ட
மலைநாடு

எண்ணுத புகழுடைய விண்மேவும் மலைநாட்டில்
உண்ணுது வறுமையிலே உழல்கின்றோர் நிலையுண்டு
கண்ணுலே கடுங்கொடுமை கண்டுஉடன்
கலங்கு வனே?
எண்ணுத எண்ணங்கள் எண்ணிமிக ஏங்குவனே?

அரையிலுடன் சரியாக அணிகின்ற துணியின்றித்
தரையினிலே தானுறங்கித் தளர்ந்துமிக
மெலிவோர்தாம்
பெரியமலை திருத்திப் பெருந்தோட்டம்
செய்தவர்கள்
திருநாடு தான்சிறக்க நலிந்துதினம்
உழைத்தவர்கள்

நாட்டிற்கு நற்செல்வம் நல்கியஇம் மக்களையே
நாடற்றோ ரென்றிங்கு நவில்தல்தான் நன்றுமோ?
ஏட்டிற்கும் பாட்டிற்கும் ஏதேதோ பலகதைகள்
எட்டாத திட்டங்கள் இம்மக்கள் வாழ்வழிவில்

கண்ணீர்க் கதைகள் கவலைமிகு காவியங்கள்
புண்ணுற்ற நெஞ்சைப் புகன்றுமிக எழுதிவிட
எண்ணித் துணிந்தென்ன எடுத்துவிடும்
கரும மெலாம்
பண்ணி முடியாது பதற்கனவாய்ச் சென்றுவிடின்

ஓயாது உயர்மலைமேல் ஓடிவரும் நதியெல்லாம்
உழைத்துழைத்து ஓடஈன உழைப்பாளர்
கண்ணீரோ?
ஓடிவரும் நதியூடே ஒலித்துவரும் ஒலியெல்லாம்
உறுபசியில் உழைப்பாளர் உற்றதுயர் அழுகுரலோ?

ஓயாது வீசுமுயர் காற்றதனின் ஒலியெல்லாம்
உழைத்துலகை உய்விக்கும் உழைப்பாளர்
ஓலமதோ?
ஆறுது சிலவேளை சூறுவளி யாதல்
மாறுத துயர்மூச்சுச் சேர்ந்ததொரு சேர்க்கையதோ?

மலைநாட்டுத் தொழிலாளர் மாய்கின்ற நிலைகண்டு
மலைத்துவிட்ட மலைதானும் மனங்கவன்று சொல்வ
தென்ன?
தத்தி என்மீது நித்தம் மிதிக்கிறுன்
தவறி விழும் நிலை கண்டுடன்நானும்
பற்றி அவனுக்குப் பாதுகாப் பளிக்கிறேன்
பாவம் அவனது பசிநிலை அறிகிறேன்

வற்றி மெலிந்த உடலது தினமும்
சுற்றி என்மீது திரிதலை உணர்கிறேன்
மற்றவர்க் கிதனைச் சொல்லியென் னுவது?

மந்திரந் தனிலும் பேசியென் னுவது?
உழைத்து நாளும் உயிர்களைக் காப்பவர்
உருக்கு லைந்து உடன்தினம் சாவதோ
எடுத்து நானும் செய்த ஒரு செயல்
எனக்குக் கூடவருத்தம் அளித்தது
நெடுத்த சாவை நின்றவர் கொள்வதை
நெஞ்சினுல் தினம் நினைக்க விரும்பிலேன்
எடுத்தனே அவர் உடலை உயிருடன்
குடித்தனே அவர் உயிரைச் சரிவினுள்.

பகலாக்கும் பகலவனும் பரிதவிப்போர்
நிலைதன்னைப்
புகலாது விட்டனனே? புகன்றகதை கேளீரோ?
ஓடி உழைக்கின்றான் உருக்குலைந்த உடலோடு
ஆடித் தளர்கின்றான் ஐயையோ அவன்பாவம்
மேடோடு பள்ளம் ஏறித் தினமிறங்கி
நாடோரைக் காக்க நலிந்துமிக உழைக்கின்றான்
உச்சியில்நான் நிற்கையிலும் ஓயா துழைக்கின்றான்
மிச்சமென துயர்கதிரால் மேனிமிகத்
தளர்கின்றான்
அச்செயலைக் கண்ட அடியேனும் முகிலூடே
ஒட்டி ஒழிக்கின்றேன் உயர்கதிரை உடன்மடக்கி

நாற்றிசையும் ஓடுகின்ற நல்லபல ஆறுகளும்
மாற்றரிய துயரோடு சாற்றிவிடும் மொழியென்ன
உச்சிமலை மீதிருந்து சிரித்துவரும் போதினிலே

சிற்ருறு சிலவந்து சேர்ந்திடலும் உண்டு கண்டீர்
சிற்ருறு சிற்ருறே சிச்சிச்சீ அது கண்ணீர்
சிந்தாது சிந்தியதால் சேர்ந்துவந்த சிறுகண்ணீர்
ஆருத வேகத்தில் ஆருக வருமென்ற
மாருத நிலைதன்னை மடமையென எண்ணுதீர்
தீராத துன்பங்கள் தினங்கண்ணீர் ஆகிவிடில்
ஆருகப் பெருகாமல் சும்மாக இருப்பதுவோ?
செம்மையுடன் நானங்கு ஓடிவந்த நிலையதனைச்
சேற்ருறு என்றெண்ணி விட்டீரோ நீரும்
ஆற்ருது உழைத்திழைத்த பாட்டாளி உதிரம்
ஊற்ருக உடன்வந்து சேர்ந்ததிது கேளீர்.
கூருதிருப்பதுவோ கொடுமை நடப்பதனை
ஆருய்ப் பெருகி அரிப்பதுவோ மலையதனை
வேருய் இதற்குப் பரிகாரம் காணீரோ
நானே இதற்கு நல்லவழி தேடுவது?
வங்கத்தாய் தனக்கவர்கள் வாடும்நிலை
எடுத்துரைப்பேன்
அரபித்தாய் தனக்கவர்கள் அவலநிலை
எடுத்துரைப்பேன்
கொங்கைக் குமரிக்கவர் கொடுந்துயரம்
எடுத்துரைப்பேன்
கொடுத்திடுநல் வாழ்விலையேல் குடித்திடவர்
உயிரென்பேன்.

திரு. மு. பாலசுப்பிரமணியம்